[திரு. அருள் அன்பரசு] [2010 ஏப்ரல் 27

அருள்மிகு யோக நரசிம்மர் ஆலயத்திற்கு ரோப் கார் அடிக்கல் நாட்டு விழா எப்போது தொடங்கும் என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏன் இத்தனை பேர் எழுந்து நிற்கிறீர்கள்? எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சோளிங்கர் ரோப் கார் அமைப்பது பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் எல்லாம் கோரப்பட்டு இப்போது முடிவு செய்யப்பட்டிருக்கிறது. பணி தொடங்குவதற்கான நாள் குறித்து நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் கலந்திருக்கிறோம். சட்டமன்ற உறுப்பினர் அவர்களிடமும் கலந்து, இன்னும் 10 தினங்களுக்குள், வருகிற 12 ஆம் தேதி இந்து சமய அறநிலையத் துறையினுடைய மானியக் கோரிக்கைக்கு முன்னதாகவே அதற்கான பணி தொடக்க விழா சிறப்பாக நடைபெறும். அந்த விழாவை நடத்த வேண்டிய பொறுப்பையும் உறுப்பினர் அவர்களே ஏற்றுக்கொள்வார்கள். அதேபோல, மூலவருக்குத் திருப்பணி செய்வதற்கு அமைக்கப்பட்டிருக்கிற குழுவில் அவரும் ஓர் உறுப்பினராக இருக்கின்றார். ஆகவே, திருப்பணியை விரைவுபடுத்துவதில் அவருக்கும் பொறுப்பு இருக்கிறது என்பதைச் சொல்லி, ஏராளமான பக்தர்கள் தாராளமாக நிதியைத் தந்து கொண்டிருக்கிறார்கள். வெகு விரைவில் அந்தப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு, குடமுழுக்கு நடத்தப்படும். (குறுக்கீடுகள்)

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) மின் நிலையங்களில் பயன்படுத்தப்படும் நிலக்கரியின் சாம்பலை தனியார் சிமெண்ட் ஆலைகளுக்குக் குறைந்த விலையில் வழங்குவதால் அரசுக்கு ஏற்படும் நட்டம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தமிழக அனல் மின் நிலையங்களிலிருந்து கிடைக்கும் நிலக்கரிச் சாம்பல் சிமெண்ட் ஆலைகளுக்கு சலுகை விலையில் வழங்கப்படுவதால் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்படும் இழப்பு குறித்து இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக

2010 ஏப்ரல் 27] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. விடியல் எஸ். சேகர், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு. ஜி.கே. மணி, திரு. தி. வேல்முருகன், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி சார்பாக செல்வி கே. பாலபாரதி, திரு. என். நன்மாறன், திரு. கே. மகேந்திரன், திரு. ப. டில்லி பாபு, திருமதி ஜி. லதா, திரு. வே. மாரிமுத்து, திருமதி ரா. லீமா றோஸ், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக திரு. வை. சிவபுண்ணியம், திருமதி பி. பத்மாவதி, திரு. சு. குணசேகரன், திரு. தி. இராமசாமி, திரு. எஸ். இராசசேகரன், திரு. கே. உலகநாதன் ஆகியோர் விதி 56—ன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்தவர்கள் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் சுருக்கமாகச் சொல்லலாம்.

முற்பகல் 10—40

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கக்கூடிய, தமிழக அரசால் நடத்தப்படுகிற வடசென்னை, எண்ணூர், தூத்துக்குடி, மேட்டூர் ஆகிய நான்கு அனல் மின் நிலையங்களுக்காக ஆண்டுக்கு 1½ கோடி டன் நிலக்கரியை நம்முடைய அரசு இறக்குமதி செய்கிறது. அப்படி இறக்குமதி செய்யப்பட்டு, அது எரிக்கப்பட்டு, மின்சாரம் தயாரிக்கும்போது கிடைக்கக்கூடிய உலர் சாம்பல் fly ash என்பது அதிக அளவில், 30 சதவிகிதம் நிலக்கரியிலிருந்து, சாம்பலாகவே வெளிவந்து, அந்தச் சாம்பல் இப்போது குறைந்த விலைக்கு சில சிமெண்ட் ஆலைகளுக்கு விற்கப்படுகின்ற காரணத்தினாலே நம்முடைய தமிழக அரசுக்கு ஏற்படக்கூடிய இழப்பீடு குறித்து நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்று நம்முடைய மின் உற்பத்தியில் கிட்டத்தட்ட 3,000 மெகா வாட் இந்த அனல் மின் நிலையங்களிலிருந்துதான் தயாரிக்கப்படுகிறது. 29 சதவிகிதம் மின் உற்பத்தி இந்த அனல் மின்சாரத்திலிருந்துதான் நமக்குக் கிடைக்கிறது. மேட்டூரிலே மட்டும் ஒரு நாளைக்கு 4,000 டன் சாம்பலை எடுக்கிறோம். அதேபோல், 10,000 டன் சாம்பல் மற்ற நான்கு அனல் மின் நிலையங்களிலிருந்து கிடைக்கிறது. இப்படி

[திரு. சி. ஞானசேகரன்] [2010 ஏப்ரல் 27

நிலக்கரி பயன்பாட்டிலிருந்து கிடைக்கக்கூடிய 30 சதவிகிதம் சாம்பலில் மத்திய அரசினுடைய உத்தரவுப்படி 10 சதவிகிதத்தைச் சிறு தொழில்களுக்கு நாம் ஒதுக்க வேண்டும், இலவசமாகக் கொடுக்க வேண்டும் என்று விதிமுறைகள் இருந்தாலும், இன்று, சாம்பல் இலவசமாகக் கொடுக்கப்படவில்லை என்கிற ஒரு கருத்து சொல்லப்படுகிறது. இதுபோன்று, அனல் மின் நிலையங்களிலிருந்து கிடைக்கக்கூடிய சாம்பல், மலை போல் குவிந்துவிடுகிறது என்ற காரணத்தினாலேயே அங்கிருந்து எடுத்தால் போதும் என்பதால், முன்பெல்லாம் அதனை யாரெல்லாம் கேட்கிறார்களோ, அவர்களுக்கெல்லாம் இலவசமாக கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அதற்குச் சேவைக் கட்டணமாக மட்டும் ஒரு டன்னுக்கு 50 ரூபாய் என்று வசூலித்துக் கொண்டிருந்தார்கள். இப்போது அந்தச் சாம்பலுக்கும் ஒரு மவுசு ஏற்பட்டு சிறு தொழில்கள் செய்யக்கூடியவர்களுக்கு 10 சதவீதம் சாம்பல் டன் ஒன்றுக்கு 100 ரூபாய் வீதம் வழங்கப்படுவதாகச் சொல்கிறார்கள். இப்படி அதிகமாகக் கிடைக்கக்கூடிய சாம்பலை சிறு தொழில்களுக்கே நாம் கொடுத்தோம் என்று சொன்னால், தொழில் வளம் பெருகும். ஆனால், இப்படி இரண்டு சிமெண்ட் ஆலைகளுக்கும் இப்போது ஒரு டன் 250 ரூபாய் என்ற கணக்கில் கொடுக்கப்படுகிறது. அதிலே, ஒரு சிமெண்ட் மூட்டையிலே 40 சதவிகிதம் இந்தச் சாம்பல் இருப்பதாகச் சொல்கிறார்கள். இன்று சிமெண்ட் விலை மூட்டைக்கு 250 ரூபாய் என்று சில்லரையில் விற்கிறார்கள். கிட்டத்தட்ட 200 ரூபாய்க்கு இந்த சாம்பலைக் கொண்டுபோனவர்கள், 200 ரூபாய்க்கு இந்தச் சிமென்டைக் கொடுத்தாலும்கூட பரவாயில்லை, இப்போது ஆண்டுக்கு 450 கோடி ரூபாய் தமிழக அரசுக்கு இதனால் இழப்பீடு ஏற்படுவதாகச் சொல்கிறார்கள். ஆகவே, நான் அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம், நம்முடைய அனல் மின் நிலையங்களில் கிடைக்கக்கூடிய சாம்பலை (fly ash) அரசு சிமெண்ட் தொழிற்சாலைகளுக்குக் கொடுத்து அதன்மூலமாக இந்த இழப்பீட்டைத் தவிர்ப்பதற்கு அரசு முன்வருமா? இப்போது வெளி மார்க்கெட்டில் டன் ஒன்றுக்கு விலை 1,500 ரூபாய் என்று சொல்கிறார்கள். சிலபேர், சிறு தொழில் புரிவதாகச் சொல்லிக்கொண்டு இதனை வாங்கிக்கொண்டுபோய், திருட்டுத்தனமாக 1,500 ரூபாய் வரை டன்னுக்கு விற்பதாகச் சொல்கிறார்கள். அப்படி 1,500 ரூபாய் பெருமானமான சாம்பலை நாம் 250 ரூபாய் டன் ஒன்றுக்கு என்கிற விலையில் கொடுக்கின்ற

காரணத்தினாலேயே ஏற்படுகின்ற அந்த 450 கோடி இழப்பீட்டை தவிர்க்கின்றமுகத்தான், நம்முடைய தமிழக அரசின் சிமெண்ட் ஆலைகளே அவற்றைப் பயன்படுத்துவதற்கோ அல்லது குறிப்பிட்ட அனல் மின் நிலையங்களில், சாம்பல் அதிகமாகக் கிடைக்கக்கூடிய இடத்தின் அருகிலேயே ஒரு சிமெண்ட் ஆலையை ஏற்படுத்தி, சிமென்டை குறைந்தவிலையில் தமிழக மக்களுக்குக் கிடைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா? இந்த இழப்பீட்டைத் தவிர்ப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் அனல் மின் நிலையங்களில் நிலக்கரி எரிக்கப்பட்டு, அதில் வீணாக செல்கிற சாம்பல்தான் இன்று மிகப் பெரிய பிரச்சினைக்கு உள்ளாகியிருக்கிறது. குறிப்பாக, இந்த சாம்பல் என்பது பல்வேறு சிமெண்ட் ஆலைகளுக்குப் பயன்படுவதோடு, பல்வேறு சிறு தொழில்களுக்கு அதிக அளவில் பயன்பாட்டில் இருந்து வந்தது. மேட்டூரில், சேலம் மாவட்டத்தில், பக்கத்தில் இருக்கக்கூடிய ஈரோடு மாவட்டத்தில், கோவை மாவட்டத்தில் எல்லாம் பல்லாயிரக்கணக்கானவர்கள் இந்த சாம்பலை மூலதனமாகக்கொண்டு சிறு தொழில்கள், குடிசைத் தொழில்களில் ஈடுபட்டு வந்தார்கள். அப்படி அவர்களுக்கெல்லாம் வழங்கப்பட்டு வந்த சாம்பல், பிறகு சிமெண்ட் ஆலைகளுக்கு வழங்கப்படுவதாகச் சொல்லி, முற்றிலுமாக சிறுதொழில் நிறுவனங்களுக்கு வழங்குவது நிறுத்தப்பட்டு, சிமெண்ட் ஆலைகளுக்கே வழங்கக்கூடிய நிலை உருவாகியது. அதற்குப் பிறகுதான் தமிழக அரசு தலையிட்டு, 10 விழுக்காடு சாம்பலை சிறுதொழில் நிறுவன உரிமையாளர்களுக்கு வழங்கலாம் என்று ஆணை பிறப்பித்தது. இருந்தும்கூட, இதுவரை வழங்கப்படவில்லை என்பதை மக்கள் அறிந்த நிலையில், இதற்காக பல போராட்டங்களையெல்லாம் நடத்தினார்கள்.

முற்பகல் 10—45

மாண்புமிகு உறுப்பினர் நண்பர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, ஏறக்குறைய ஒரு நாளைக்கு

[திரு. ஜி.கே. மணி] [2010 ஏப்ரல் 27

உற்பத்தியாகும் 10 ஆயிரம் டன் சாம்பலில், மேட்டூரில் மட்டும்தான் அதிகமாக 4 ஆயிரம் டன் சாம்பல் உற்பத்தியாகின்றது. அந்த சாம்பலை அனல் மின்நிலையங்களிலிருந்து குறைந்த விலைக்கு சிமெண்ட் ஆலைகள் வாங்கி, அதை அதிக விலைக்கு விற்பனை செய்கிறார்கள். ஆகவே, இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதெல்லாம், சிமெண்ட் தயாரிக்கின்ற ஆலைகள் பெற்றுக்கொண்ட சாம்பலை அரசின் கட்டுப்பாட்டு விலைக்கே, ஏன் குறைந்த விலைக்கு விற்க முன்வரக்கூடாது என்பது என் கேள்வி. அதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பது ஒரு கேள்வி. அதோடு சிறுதொழில் நிறுவனங்களுக்கு அந்தச் சாம்பலை தொடர்ந்து வழங்குவதற்கு அரசு ஆவன செய்யவேண்டும். குறிப்பாக, அந்த சாம்பலை அதிகமாகப் பயன்படுத்துகின்ற சிறுதொழில் நிறுவனங்களுக்கு லாரிமூலம் ஏற்றி, மேட்டூர் பகுதிக்கு வழங்க முன்னுரிமை வழங்கவேண்டும். பிறகு, ஈரோடு மாவட்டம், கோவை மாவட்டம் போன்ற பகுதிகளுக்கு அடுத்த முன்னுரிமையை வழங்க வேண்டுமென்ற வேண்டுகோளையும் வைக்கின்றேன். ஒட்டுமொத்தமாக இந்த சாம்பலை எடுத்தால் போதும் என்கின்ற நிலை மாறி, அரசுக்கு இதனால் 450 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படுகின்றது என்று சொல்லப்படுவதால், இது மிகப் பெரிய தொகையாக இருக்கின்ற காரணத்தாலே, இந்தத் தொகையை ஈட்டுவதற்கும், சிறுதொழில் நிறுவனங்களைப் பாதுகாப்பதற்கும் அரசு முன்வருமா என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி சார்பாகவும், இந்திய கம்யூனிஸ்டு கட்சி சார்பாகவும் அறிவிப்புக் கொடுத்தவர்கள் அவையில் இல்லை. மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனல் மின் நிலையங்களிலிருந்து வெளியேற்றப்படும் உலர் சாம்பல் வெளி மார்க்கெட்டில் டன் ஒன்றுக்கு 1,500 ரூபாய் வீதம் விற்பனை செய்யப்படுகின்றது என்று பத்திரிகைகளில் செய்தி வந்ததன் அடிப்படையில், அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காக மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். இந்த உலர் சாம்பலைப் பற்றிய ஒரு சிறு செய்தியை நான் இந்த அவைக்குத்

2010 ஏப்ரல் 27] [திரு. துரைமுருகன்]

தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை 27–8–2003 அன்று ஓர் ஆணை, G.O. வெளியிட்டது. நிலக்கரி அல்லது பழுப்பு நிலக்கரியை உபயோகிக்கும் அனல் மின்நிலையங்களில் கிடைக்கக்கூடிய உலர் சாம்பல் fly ash–ஐ, 27–8–2003 அன்று முதல், 10 ஆண்டுகளுக்கு, சிமெண்ட், செங்கல், கான்கிரீட் பிளாக் போன்ற பொருட்கள் செய்வதற்கும், சாலைகளில் ஏற்படும் பள்ளங்களை நிரப்புவதற்கும், அணைகள் கட்டுவதற்கும், கட்டணம் ஏதுமின்றி வழங்க வேண்டுமென்று மத்திய அரசு ஓர் ஆணை பிறப்பித்தது. இதற்கிடையில் நான் ஒன்றைத் தெரிவித்துவிடுகின்றேன். இதுதான் நடைமுறைக்கு வந்தது. மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்ததைப்போல, தமிழ்நாட்டில் அனல் மின்நிலையங்கள் ஆண்டொன்றுக்கு ஒன்றரை கோடி டன் நிலக்கரியை உபயோகப்படுத்துகின்றன. நிலக்கரியைக் கொண்டு மின்சாரம் தயாரிக்கின்றபோது, 40 சதவிகிதம் நிலக்கரி சாம்பலாகப் போகிறது. அந்த 40 சதவிகிதச் சாம்பலில் 70 சதவிகிதம்தான் fly ash-உலர் சாம்பல்.

2001–2003 ஆம் ஆண்டுகளில் இதைப் பற்றிக் கேட்பார் கிடையாது. இது அனல் மின்நிலையங்களிலேயே குவிந்து கிடக்கும். மாசுக் கட்டுப்பாடு வாரியம் அனல் மின்நிலையங்களுக்குத் தாக்கீது அனுப்பிக்கொண்டே இருக்கும். அதை அப்புறப்படுத்துவது அனல் மின் நிலையங்களுக்கு ஒரு பெரிய தொல்லையாக இருந்தது. அப்பொழுதுதான் சில சிமெண்ட் ஆலைகள் ஒரு குழுவை ஏற்படுத்தின. Pressurised Dense Fly Ash Collection System என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தின. அந்த அமைப்பு தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை MoU செய்து கொண்டன. 9 ஆண்டுகளுக்கு ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். அந்த ஒப்பந்தப்படி உலர் சாம்பலைச் சேகரிக்கின்ற அந்த சிமெண்ட் கம்பெனிகள் 80% எடுத்துக்கொள்ளும். ஏன் என்றால் அப்பொழுது கேட்பார் யாரும் இல்லை. ஆகையால், ஒரு Association form செய்து அதன்மூலமாக நாங்கள் 80% எடுத்துக்கொள்கிறோம், மீதி இருக்கிற 20% யார் வருகின்றார்களோ, first come first served என்ற முறையில் அவர்களுக்கு அதைக் கொடுத்து விடுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். ஆனாலும், இலவசமாகத்தான் தரவேண்டும். இருந்தாலும் தமிழக அரசு அதற்கு ஒரு சேவைக் கட்டணம்

போட்டு, ஒரு டன்னுக்கு 60 ரூபாய் என்று வசூல் செய்து கொண்டிருந்தது. மத்திய அரசு மறுபடியும் ஒரு அரசு ஆணையை 3–11–2009–ல் போட்டார்கள். அதன்படி, என்ன சொன்னார்கள் என்று கேட்டால், இந்த சாம்பல் சேகரிக்கின்ற அமைப்பு நிறுவனங்கள் இருக்கிறதே ஒரு Association, அவர்களுக்கு டன் ஒன்றுக்கு 200 ரூபாய்க்குக் கொடுக்கவேண்டும். மற்றப் பயனாளிகளுக்கு 300 ரூபாய்க்குக் கொடுக்கவேண்டும். செங்கல் தயாரிப்பாளர்களுக்கு டன் ஒன்றுக்கு 100 ரூபாய்க்குக் கொடுக்கவேண்டும் என்று உத்தரவுப் போட்டார்கள். ஆனால், நாங்கள் 200 ரூபாய்க்குப் பதில் 250 ரூபாய் வாங்கினோம். 300 ரூபாய்க்குப் பதில் 350 ரூபாய் collect செய்தோம். செங்கல் தயாரிப்பாளர்களுக்கு மட்டும் அதே 100 ரூபாயைத்தான் கட்டணமாக வசூல் செய்தோம்.

முற்பகல் 10–50

அதனடிப்படையில் பார்த்தால், இன்றைக்கு 100% fly ash அங்கிருந்து remove செய்யப்பட்டிருக்கிறது. உங்களை ஒன்று நான் கேட்கின்றேன், 1,500 ரூபாய்க்கு ஒரு டன் வெளி மார்க்கெட்டில் விற்கிறது என்று சொல்கிறார்கள். நிலக்கரியையே டன் ஒன்றுக்கு ரூபாய் 2,100 கொடுத்துதான் வாங்குகிறோம். நிலக்கரியினுடைய ஒரு டன் விலையே ரூபாய் 2,100, அதனுடைய சாம்பல் 1500 ரூபாய்க்கு விலை போகுமா? அது ஒன்று. இதன்மூலம் வருமானம் வருவது சர்க்காருக்கு. நாமாக வாங்கியதன் விளைவு, 2004–2005–ல் 10 கோடி ரூபாய் வருமானம், 2005–2006–ல் 11 கோடி ரூபாய், 2006–2007–ல் 14 கோடி ரூபாய், 2007–2008–ல் 16 கோடி ரூபாய், 2008–2009–ல் 17 கோடி ரூபாய், 2009–2010–ல் 42 கோடி ரூபாய், 2010–2011–ல் 71 கோடி ரூபாய் கிடைக்குமென்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, இந்தச் சேவை குறித்து, செங்கல் சூளைக்காரர்கள் வழக்கு ஒன்றை உயர் நீதிமன்றத்திலே போட்டு இருக்கிறார்கள். அந்த வழக்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே, இதிலே சர்க்காருக்கு இருக்கின்ற பிரச்சினைகள் என்னவென்று கேட்டால், சும்மா கொடுங்கள் என்று சொன்னபொழுதே 60 ரூபாய் கட்டணம் வாங்கிக்கொண்டு கொடுத்தது தமிழக அரசு. ஆகையால், இருக்கிற சாம்பலை வாரி யாருக்கும் தாராளமாக விநியோகம் செய்யவில்லை. அவர்கள் 300 ரூபாய்க்கு விற்பதை 350 ரூபாய்க்கு வாங்குகிறோம்.

2010 ஏப்ரல் 27] [திரு. துரைமுருகன்]

ஆகையினால், மத்திய அரசு நிர்ணயித்த தொகையைவிட அதிகமாகத்தான் தமிழக அரசு வசூல் செய்திருக்கிறது. இதில் எந்தவிதமான தவறும் நடைபெறவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினை சம்பந்தமாக ஒரு நல்ல விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். எங்கள் பகுதியிலே, hollow blocks என்று சொல்லக்கூடிய சிமென்ட் பிளாக் செய்கின்றவர்கள் தூத்துக்குடி அனல் மின் நிலையத்திலிருந்து இந்த சாம்பலை வாங்கிக்கொண்டு வந்துதான் செய்கின்றார்கள். அதற்காக, தமிழ்நாடு மின்சார வாரியம் அவர்களுக்கு ஒரு மாதத்திற்கு 100 டன் கொடுக்கிறது. ஒரு registered small scale industry-உடைய hollow block manufacturers-க்கு 100 டன் கொடுக்கிறது. ஆனால், இந்த 100 டன் கொடுத்தாலும் அவர்களுக்கு 10 நாட்களுக்குக்கூட வேலை நடைபெறுவதில்லை. தொழிலாளர்களை வைத்து வேலை செய்யமுடியவில்லை. இப்பொழுது சிமென்ட் விலை அதிகமாக இருப்பதினாலே, செங்கல் விலை அதிகமாக இருப்பதினாலே இந்த hollow blocks-ஐ வைத்துத்தான் compound wall, even கட்டடங்களைக்கூடக் கட்டுகிறார்கள். ஆகவே, இந்த small scale industry நடத்துகிறவர்களுக்கு இப்பொழுது 100 டன் கொடுக்கிறீர்கள். அவர்கள் அதை கூடுதல் விலை கொடுத்து எடுத்துக்கொண்டு போவதற்குத் தயாராக இருக்கிறார்கள். 10 நாள் அரசு கொடுக்கின்ற quota-வை வைத்து, அந்த industry–யை நடத்துகிறார்கள். மீதி 20 நாள் வெளிச் சந்தையிலே அதிகமாகப் பணம் கொடுத்து அந்த industry-யை நடத்துகிறார்கள். இப்பொழுது, அவர்கள் எவ்வளவு சாம்பல் வேண்டுமானாலும் கூடுதல் விலை கொடுத்து எடுத்துப் போவதற்குத் தயாராக இருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடம், நானும், சட்டமன்ற காங்கிரஸ் கட்சியின் தலைவர் அவர்களும் சேர்ந்து கடந்த மாதத்திற்கு முன்னால் ஒரு மனு கொடுத்தோம். இப்பொழுது, அதை அரசு ஏலத்தில் விடுவதற்கு முன்வருமா? இப்பொழுது அந்தப் பொருளுக்கு ஒரு மதிப்பு வந்திருக்கிறது. ஆகவே, 200 ரூபாய்க்கும், 100 ரூபாய்க்கும் எடுத்துக்கொள்ளத்

தயாராக இருக்கின்றவர்கள் அதை அரசு ஏலத்தில் விட்டு யார் கூடுதல் விலைக்கு எடுத்துச் செல்கிறார்களோ, அதனால் அரசுக்கு அதிக ஆதாயம் கிடைக்கலாம். அதைச் செய்வதற்கு அரசு முன்வருமா என்று தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

*முற்பகல் 10—55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையை முதன்முதலில் zero hours—ல் கடந்த வாரம் நான்தான் எழுப்பினேன். இதில் தவறு நடந்திருக்கிறது, அரசு தவறு செய்து விட்டது என்று குற்றச்சாட்டாக நாங்கள் இதைச் சொல்லவில்லை. குறிப்பாக பொது ஏலத்தின்மூலமாக சிமென்ட் ஆலை அதிபர்கள் அனைவரும் அதை எடுத்துக்கொள்வதற்குப் பதிலாக, கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பாக இரண்டு நிறுவனங்களுக்கு மட்டும் தருவதற்கான ஓர் ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. செங்கல் சூளைக்கும், hollow block செய்வதற்கும், இன்னும் சொல்லப்போனால் உள்ளாட்சித் துறையின்மூலமாக பரீட்சார்த்தமாக இந்த சாம்பலை எடுத்து, சாலைகள் அமைக்கின்ற பணிக்கும் இதைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அதற்கும் இதன் தேவை இருக்கிறது.

விஞ்ஞான உலகத்தில் காலப்போக்கில் மாற்றம் ஏற்பட, ஏற்பட எப்படி நீங்கள் ஒவ்வோர் ஆண்டும் அரசுக்கு வருமானம் வருகிற புள்ளிவிவரங்களைச் சொல்லியபோது, குறைவாக இருந்து, வரும் ஆண்டில் 70 கோடி வரும் என்று எதிர்பார்க்கிறீர்களோ, அந்த அளவுக்கு அதற்கு வெளி மார்க்கெட்டில், small scale industries தனியார் செங்கல் சூளை அதிபர்கள் மற்றும் hollow block நிறுவனம் நடத்துகின்றவர்கள் ஆகியோருக்குத் தேவை அதிகமிருக்கிற காரணத்தால், அரசுக்குக் கூடுதலாக வருமானத்தை ஏற்படுத்தித் தரவேண்டும் என்கிற நல்ல நோக்கத்தின் அடிப்படையில்தான், இந்தக் கருத்தை நான் இந்த அவையில் கொண்டு வந்தேன். ஆக, அந்த அடிப்படையில் அதை பொது ஏலத்தின்மூலமாக தமிழ்நாட்டில் இருக்கிற அனைத்து சிமென்ட் ஆலை அதிபர்களுக்கும் கிடைக்கின்ற வகையிலும், சிறுதொழில் small scale industries செய்யக்கூடிய அனைவருக்கும் கிடைக்கின்ற வகையிலும், தனியார் செங்கல் சூளை மற்றும் hollow block

2010 ஏப்ரல் 27] [திரு. தி. வேல்முருகன்]

நிறுவனங்கள் நடத்துகின்றவர்களுக்கும், சாலை வசதிக்கு உள்ளாட்சித் துறை அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும்கூட மனது வைத்தால் அப்படியே இதில் ஆயிரக்கணக்கான டன்களை எடுத்து சாலைப் பயன்பாட்டிற்கும் இதைப் பயன்படுத்துவதற்கான ஒரு ஆய்வு தற்போது நடந்து கொண்டிருக்கிறது. ஆக, அந்த வகையிலும் இதற்கு கிராக்கி அதிகமாக இருகின்ற காரணத்தினாலே, அரசுக்குக் கூடுதல் வருமானம் வருகின்ற ஒரு நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டும் என்பதற்கு இந்த அவையின் கவனத்தை ஈர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலேயே நான் சொன்னேன். இந்த ash—ஐ எப்படி dispose பண்ணுவது என்பதற்கே instructions given by Central Government. அவர்கள் G.O.வில் free—ஆகக் கொடு என்று சொன்னார்கள். பிறகு விலைக்குக் கொடு என்று சொன்னார்கள். என்ன விலைக்குக் கொடுக்க வேண்டும் என்று அவர்கள்தான் சொல்கிறார்கள். நாங்கள் அதை விட்டுவிட்டு, நீங்கள் என்ன விலைக்குக் கொடுக்கலாம் என்று G.O. போட்டிருந்தாலும், நான் ஏலம் விடுகிறேன் என்று விடமுடியாது. மறுபடியும் மத்திய சர்க்கார்தான் அதற்கும் permission கொடுக்க வேண்டும். இது முதலாவது. இரண்டாவது, ஏதோ இரண்டு கம்பெனிகளுக்குத்தான் இதைக் கொடுத்துவிட்டார்கள் என்று உறுப்பினர் சொன்னார். இல்லை. முதலில் இன்னொரு விஷயம். இப்பொழுது திடீரென்று மாற்ற முடியாது. நிறைய பேர் ash—ஐ அதிகமாகக் கேட்கிறார்கள் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொன்னார்கள். முதலில் 2000—2001—ல் இதைக் கேட்பதற்கு ஆட்கள் கிடையாது. எடுத்துக் கொண்டு போவதற்கு முடியாது. அந்த Thermal Station—ல் இருப்பவர்கள் இதை என்ன செய்வது என்று புரியாமல் இருந்தார்கள். அப்போதுதான் Association ஒன்றை form பண்ணினார்கள் சிமெண்ட் கம்பெனிகாரர்கள். நாங்கள் அதை dispose பண்ணிக்கொள்கிறோம். எங்களுக்கு 80 percent கொடுங்கள். மீதி 20 percent—ஐ வேறு யாருக்காவது first come first served-என்ற முறையில் கொடுங்கள் என்று சொன்னார்கள். அந்த ஒப்பந்தம், MoU 9 ஆண்டுகளுக்கு இருக்கிறது. அந்த ஒப்பந்தத்தை TNEB

[திரு. துரைமுருகன்] [2010 ஏப்ரல் 27

செய்து கொண்டிருக்கிறது. அந்த ஒப்பந்தம் இருக்கும்போது திடீரென்று அதை கேன்சல் செய்துவிட்டு, டெண்டர் விடுகிறோம், அதாவது ஏலம் விடுகிறோம் என்று நாங்கள் சொல்ல முடியாது. மூன்றாவது, ஒரு கம்பெனி அல்ல, Madras Cements, India Cements, Ultra Tech Cements, Grasim Industries, A.C.C., Chettinad Cements, Ash Tech Private Limited, A.R.K. Company. இவ்வளவு சிமெண்ட் கம்பெனிக்காரர்கள் இதனை வாங்குகிறார்கள். யாருக்கும் தனிப்பட்ட வகையிலே கொடுக்கவில்லை. பிறகு அந்த Association–லே இருக்கிறார்களே, நான் முன்னாலே சொன்னேனே, ஒரு Association–ஐ அவர்கள் form பண்ணியிருக்கிறார்கள், Pressurised Dense Fly Ash Collection System என்று. அந்த Association–லே யார், யார் இருக்கிறார்களோ அவர்களுக்குத்தான் கொடுக்கிறோமே தவிர. தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கவில்லை. எனவே, இதை இலவசமாகவே கொடுங்கள் என்று சொன்னபோதுகூட, நாம் ஒரு டன்னுக்கு 60 ரூபாய் வாங்குகிறோம், அப்போதுகூட கட்டணம் என்று வாங்கவில்லை. ஏன் என்றால், மத்திய அரசினுடைய ஆணை அப்படி இருக்கிறது. ஆகையினால்தான், service charge என்று வாங்கினோம். ஆகையினால், எல்லாவற்றையும் ஒரே நாளில் தூக்கி போட்டுவிட்டு செய்யமுடியாது. ஆனால், மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துகள், அதிலே இருக்கக்கூடிய பொருட்களை உணர்ந்து, மத்திய அரசாங்கத்தோடு பேச முடியுமா என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து பேசி, தேவை என்றால் நடவடிக்கை எடுக்கப்படும்.

### (ஆ) தூத்துக்குடி மாவட்டம், சூறாவளியால் கடற்கரைப் பகுதிகளில் நிறுத்தப்பட்ட படகுகளின் சேதத்திற்கு நிவாரணம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தூத்துக்குடி மாவட்டத்தில் 7–4–2010 அன்று இரவு வீசிய சூறாவளிக் காற்றின் காரணமாக, கடற்கரைப் பகுதியில் கட்டப்பட்டிருந்த ரூபாய் 10 கோடி மதிப்புள்ள படகுகள் சேதமடைந்தது குறித்து இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. சி. ஞானசேகரன், திரு. விடியல் எஸ். சேகர், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு. தி. வேல்முருகன், டாக்டர் க. நெடுஞ்செழியன், திரு. அ. தமிழரசு, திரு. இல. வேலுசாமி, இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியின் சார்பாக செல்வி கே. பாலபாரதி, திரு. என். நன்மாறன், திரு. கே. மகேந்திரன், திரு. சி. கோவிந்தசாமி, திரு. வே. மாரிமுத்து,